**சுருக்கம்**

சென்னை மாநகராட்சி – தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணி – திட்ட மதிப்பீடுத்தொகை ரூ.23.00 கோடிக்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை**

அரசாணை (நிலை) எண்.117 நாள்: 06.07.2009

ஆனி – 22,
திருவள்ளுவர் ஆண்டு – 2040,

**படிக்கவும்:**

சென்னை மாநகராட்சி ஆணையர் கடித பா.து.ந.க. எண்.பி3/370/2008, நாள்.16.05.2008, 20.06.2008, 18.09.2008, 14.11.2008, 06.01.2009, 23.03.2009 மற்றும் 28.05.2009

* * * * *

**ஆணை:–**

மேலே படிக்கப்பட்ட சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதங்களில் சென்னை மாநகராட்சி, பாலங்கள் துறையால் சென்னை மாநகரில் நெரிசல் மிகுந்த சாலை சந்திப்புகளில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டு, போக்குவரத்து நெரிசல் மிகுந்த தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு ஆய்வு மற்றும் வடிவமைப்பு, வரைபடப் பணிகளை மேற்கொள்ள Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited மூலமாக கலந்தறிதற்குரியவர் திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டது என்றும், Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited மற்றும் ஒருங்கிணைப்புக் குழு (Co-ordination Committee) ஆகியோர் கலந்து கொண்ட கலந்தாய்வு கூட்டத்தில் தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்களால் பெறப்பட்ட கருத்துரு ஆய்வு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வரைபடத்தின்படி பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் நில ஆர்ஜிதம் செய்ய பூர்வாங்க பணிகள் மற்றும் பெறப்படும் வடிவமைப்பின்படி மதிப்பீடுகள் தயாரித்து பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக மன்றத்தீர்மான எண்.641/2007, நாள் 29/12/2007–ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேலும் கலந்தறிதற்குரியரான திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்கள் மேற்கண்ட பணிக்கான வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடுகளை அளித்துள்ளார் என்றும் கலந்தறிதற்குரியவர் அளித்த வடிவமைப்பை சரிபார்க்கும் பணிக்காக ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, தற்போது பி.இ.எம்.எஸ். நிறுவனம் மூலமாக சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது என்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். இதனிடையே மேற்கண்ட மேம்பாலப்பணியினை மேற்கொள்ள சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் தனது நிலத்தடிக்குழாய்களை மாற்றியமைப்பதற்காக

ரூ.3,33,00,000/– க்கு மதிப்பீடும், தமிழ்நாடு மின்சார வாரியம் தனது கம்பி வடங்களை மாற்றியமைக்க ரூ.18,78,985/– மற்றும் ரூ.1,55,760/– க்கு மதிப்பீடுகள் அளித்துள்ளது. மேற்கண்ட சேவைத்துறையினரின் நிலத்தடி குழாய்கள் மற்றும் கம்பி வடங்களை மாற்றுவதற்கு முன்பணம் செலுத்த வேண்டியுள்ளதால் இம்மேம்பாலம் அமைக்கும் பணிக்காக 2008–09 ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்படி ரூ.26,00,00,000/–க்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் இத்தோராய மதிப்பீடு தொகைக்கு அரசின் ஆட்சி முறை ஒப்பளிப்பு பெறப்பட வேண்டும் எனவும் சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. எனவே தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு சேவைத் துறையினரின் நிலத்தடி குழாய்கள் மற்றும் கம்பிவடங்களை மாற்ற சேவைத்துறையினருக்கு பணியினை முடிக்கும் வகையில் உடனடியாக பணம் செலுத்த வேண்டியுள்ளதால், சென்னை தங்க சாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு தோராய மதிப்பீட்டுத் தொகையான ரூ.26.00 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்குமாறு சென்னை மாநகராட்சி ஆணையர் அரசை கோரியுள்ளார்.

5. சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துருவை அரசு ஆழ்ந்து பரிசீலித்தபின், மேற்பார்வை செய்யும் பணியாளர்களின் சம்பளம் சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுவதாலும், இத்திட்டத்திற்கான திட்ட மதிப்பீட்டிலிருந்து செய்யப்படவில்லை என்பதாலும் இதுதொடர்புடைய செலவை திட்ட மதிப்பீட்டுடன் சேர்க்க கூடாது என்றும், பொதுப்பணித்துறை எதிர்பாரா செலவினத்திற்காக 2.5 சதவீதமும் மேற்பார்வை செலவுக்காக 2.5 சதவீதமும் கோரும்போது அதிகப்படியான செலவு மேற்படி இனங்களுக்கு மேற்கொள்ள முகாந்திரம் இல்லை என்றும், இது குறைக்கப்பட வேண்டும் என்றும் மேலும் 2009–2010ஆம் ஆண்டிற்கான விலை விகிதம் குறைவாக இருப்பதாலும் மேற்படி ஆணை பெற திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் நிர்வாக அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்தனையுடன் சென்னை மாநகராட்சி தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு ரூபாய் 23 கோடிக்கு (ரூபாய் இருபத்திமூன்று கோடி மட்டும்) அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடுகிறது.

6. இவ்வாணை 22.06.2009 நாளிட்ட நிதித்துறை அ.சா.எண்.1627/FS/P/2009 ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசு செயலாளர்.

பெறுநர்:
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
மாநில கணக்காயர், சென்னை – 18/35
இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை – 108.
<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
தலைமைச் செயலரின் தனி செயலர், சென்னை – 9
நிதித்துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2)துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்